# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 111 | thalaivaasaltv@gmail.com | வெள்ளிக்கிழமை | ஜனவரி 29, 2021

தற்போது இணையத்திலும் தலைவாசல் www.thalaivaasal.news




## தமிழுக்கு முதலிடம்

யாழ்ப்பாணம் நெடுந்தூர பேருந்து நிலையத்தின் தரிப்பிடப் பலகையில் தமிழ்மொழி முதலாவதாக மாற்றும் பணி மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், சட்டத்தரணி வி.மணிவண்ணனின் பணிப்புக்கு அமைய, உள்ளூர் அச்சக நிறுவனம் ஒன்றின் ஊடாக தரிப்பிட பலகைகள் சீரமைக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் நெடுந்தூர பேருந்து நிலையத்தின் தரிப்பிடம் புதிதாக அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை

03

## யாழில் 2300 சுகாதார துறையினருக்கு நாளை கொரோனா தடுப்பூசி

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதனா வைத்தியசாலை உள்ளிட்ட வைத்தியசாலை மருத்துவ சேவையாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினருக்கு கோவிட் -19 தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி நாளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு, கோவிட் -19 தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி நாளை தொடக்கம் மூன்று நாள்களுக்கு

03




# வடக்கிற்கு 11,080 தடுப்பூசிகள் கிடைத்தன: தடுப்பூசித் திட்டம் நாளை ஆரம்பம்

வடக்கு மாகாண வைத்தியசாலைகள் ஊடாக மருத்துவ சேவையாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினருக்கு வழங்குவதற்காக 11 ஆயிரத்து 80 கொவிட்-19 தடுப்பூசி மருந்துகள் கிடைத்துள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

03

## மன்னாரிலும் சுகாதார துறையினருக்கு நாளை கொவிட்-19 தடுப்பூசி

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கொவிட்-19 தடுப்பூசிகள் மன்னார் மாவட்டத்தில் நாளைய தினம் சனிக்கிழமை(30) சுகாதார துறையினருக்கு முதல் முதலாக செலுத்தப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,

03

## முதலாவது தடுப்பூசி வைத்தியர் ஆனந்த விஜேவிக்கிரமவிற்கு செலுத்தப்பட்டது



இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா செனெகா ( Oxford Astra - Zeneca) தடுப்பூசி வழங்கும் நிகழ்வு இன்று ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி, முதலாவது தடுப்பூசி வைத்தியர் ஆனந்த விஜேவிக்கிரமவிற்கு கொழும்பு

03

## ஐ.நா. பொதுச் செயலாளருக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டது



ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் கொரோனா வைரஸ் தடுப்பூசியைப் போட்டுக் கொண்டார்.

71 வயதான குட்டரெஸ் தனது வயதின் அடிப்படையில் தடுப்பூசி பெற தகுதியுடையவராக உள்ளார். நியூயோர்க்கில் 65 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கு தற்போது தடுப்பூசி

03

## தீவிர சிகிச்சைப் பிரிவில் சுகாதார அமைச்சர் அனுமதி

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கொழும்பு ஐடிஎச்இல் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு கடந்த 23 ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

நேற்று பகல் கொழும்பு கொத்தலாவல பாதுகாப்பு



03

## இலங்கையில் மற்றொரு வகை கோரோனா வைரஸ் கண்டறிவு

கோரோனா வைரஸின் மற்றொரு புதிய வகை இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் வல்லுநர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த வீரியம் கூடிய புதிய வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த மாறுபாடு தற்போது டென்மார்க், சுவிட்சர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளில் வேகமாக பரவி வருவதாக ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

# ஊடகவியலாளர் பிரகித் எக்னலிகொடவுக்கு நீதி கோரி மட்டக்களப்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகித் எக்னலிகொடவுக்கு நீதி கோரி மட்டக்களப்பில் கண்டன ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

ஊடகஅமைப்புக்கள் இணைந்து நடாத்திய இவ் ஆர்ப்பாட்டமானது மட்டக்களப்பு காந்திபூங்கா முன் காலை 10.30 மணியளவில் ஆரம்பமானது. உழைக்கும் ஊடக தொழிற்சங்க சம்மேளனம், கிழக்குமாகாண தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகியவை இணைந்து இவ் ஆர்ப்பாட்டத்தை நடாத்தியது.

இவ் ஆர்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் , தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் மட்டக்களப்பு மாநகர முதல்வர், உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும், சர்வதேசமே பதில்சொல், காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியராளர எங்கே?, படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நீதியைப்பெற்றுக்கொடு போன்ற கோசங்களை எழுப்பினர்.



# யாழ். போதனா வைத்தியசாலையில் உயர் குருதி அழுக்க சிகிச்சை நிலையம் திறப்பு



யாழ்ப்பாணம் உயர் குருதி அமுக்க சிகிச்சை நிலையம் (Jaffna Heypertension Centre) போதனா வைத்தியசாலையில் இன்று திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் விக்டோரியா வீதியில் உள்ள புதிய கிளினிக் கட்டடத் தொகுதியில் இந்த சிகிச்சை நிலையம் இன்று (ஜன.29) வெள்ளிக்கிழமை நண்பகல் திறந்து வைக்கப்பட்டது.

இருதய சிகிச்சை வல்லுநர் பூ.லக்ஸ்மன் இந்த சிகிச்சை நிலையத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி, சிகிச்சை நிலையத்தின் முதல் பணிப்பாளர், பொது மருத்துவ வல்லுநர், பேராசிரியர் தி.குமணன் மற்றும் துறைசார் மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள் இந்த ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மருத்துவப் பிரிவு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக சிகிச்சைப் பிரிவு, அகஞ்சுரக்கும் தொகுதிப் பிரிவு ஆகியவை இணைந்து யாழ்ப்பாணம் உயர் குருதி அமுக்க சிகிச்சை பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சிகிச்சை நிலையத்தின் முதல் பணிப்பாளராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர், பொது மருத்துவ வல்லுநர் திருநாவுக்கரசு குமணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிதீவிரமான குருதி அமுக்கம், இளவயதில் குருதி அமுக்கம் போன்ற சிறப்புக் கவனிப்பு தேவையுள்ள நோயாளிகள் இந்த சிகிச்சை பிரிவினால் சிகிச்சையளிக்கப்படுவார்கள்.

அத்தோடு இந்த சிகிச்சை நிலையம் ஊடாக மக்களுக்கு உயர் குருதியமுக்கம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் ஆராய்ச்சிப் பணிகளையும் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்

யாழ்ப்பாணம் உயர் குருதி அமுக்க சிகிச்சை நிலையம் (Jaffna Heypertension Centre) போதனா வைத்தியசாலையில் இன்று திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் விக்டோரியா வீதியில் உள்ள புதிய கிளினிக் கட்டடத் தொகுதியில் இந்த சிகிச்சை நிலையம் இன்று (ஜன.29) வெள்ளிக்கிழமை நண்பகல் திறந்து வைக்கபட்டது.

இருதய சிகிச்சை வல்லுநர் பூ.லக்ஸ்மன் இந்த சிகிச்சை நிலையத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி, சிகிச்சை நிலையத்தின் முதல் பணிப்பாளர், பொது மருத்துவ வல்லுநர், பேராசிரியர் தி.குமணன் மற்றும் துறைசார் மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள் இந்த ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மருத்துவப் பிரிவு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக சிகிச்சைப் பிரிவு, அகஞ்சுரக்கும் தொகுதிப் பிரிவு ஆகியவை இணைந்து யாழ்ப்பாணம் உயர் குருதி அமுக்க சிகிச்சை பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சிகிச்சை நிலையத்தின் முதல் பணிப்பாளராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர், பொது மருத்துவ வல்லுநர் திருநாவுக்கரசு குமணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிதீவிரமான குருதி அமுக்கம், இளவயதில் குருதி அமுக்கம் போன்ற சிறப்புக் கவனிப்பு தேவையுள்ள நோயாளிகள் இந்த சிகிச்சை பிரிவினால் சிகிச்சையளிக்கப்படுவார்கள்.

அத்தோடு இந்த சிகிச்சை நிலையம் ஊடாக மக்களுக்கு உயர் குருதியமுக்கம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் ஆராய்ச்சிப் பணிகளையும் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# இணையவழி இரண்டு நாடகங்களை நாளை காணலாம்

தற்போதைய கோவிட் 19 முடக்க நிலையுள்ள சூழலில் பல துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதில் நாடகத் துறையும் ஒன்று மனிதர்கள் ஒன்று கூடுவதால் சாத்தியப்படுவது தான் நாடகம். இப்போது மனிதர்கள் ஒன்று கூடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்ற சூழல் காணப்படுகின்றது. இதனால் அண்மைக்காலமாக நாடக ஆற்றுகைகளுக்கு சாத்தியம் இல்லை என்ற நிலையே நீடிக்கிறது.

இந்தச்சூழலில் மெய்நிகர் அரங்க வெளியில் (Online Theatre Space) நாடகங்களை மேடையேற்றும் முயற்சியை செயல் திறன் அரங்க இயக்கம் (Active Theatre Movement) இந்த ஆண்டு தை 15 திகதியிலிருந்து ஆரம்பித்திருந்தது. இது ஈழத்தின் நாடக முயற்சிகளில் புதிய திருப்பமாக அமைந்துள்ளதோடு, ஈழத்து நாடக மேடையேற்றங்களின் முதல் முறையான அரங்காற்றுகையாகவும் பதிவாகியிருக்கிறது. இந்த மெய்நிகர் நாடக வெளியை உருவாக்குவதற்கு சூம் செயலியின் வசதிகள் பயன்படுத்தப்பட்டன. இதில் 'வண்டியும் தொந்தியும்' என்ற நாடகம் முதல்முறையாக ஆற்றுகை செய்யப்பட்டது. இது இரண்டு தடவைகள் அரங்கேறியிருக்கின்றது. இரண்டு நடிகர்கள் மட்டும் பங்கு கொண்டிருந்தார்கள். இதன் தொடர்ச்சியாக எதிர் வரும் தை 30, 31 திகதிகளில் மேலும் இரண்டு நாடகங்கள் சூம் செயலிவழி அரங்கேறுகின்றன. இதில் இரண்டு வகையான நாடகங்கள் மேடையேறுகின்றன. 'ஏகாந்தம்' என்ற வேடமுக நாடகம். முழு வேடமுகத்தைப்பயன்படுத்தி இதில் நடிக்கிறார்கள். தமது பிள்ளைகள் வெளிநாடுகளுக்கு சென்று விட இங்கு தனித்திருக்கும் முதியவர்களின் வாழ்வியல் பற்றி இந்த நாடகம் பேசுகிறது. இது அற்புதமான காட்சிப்பெறுமானங்கள் உடைய நாடகமாகும். இது சூம் செயலிவழி புதிய அனுபவத்தைக் கொடுக்குமென்று ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றார்கள். இதே போன்று ஓராள் அரங்காக 'மரணச்சான்றிதழ் என்ற நாடகம் அரங்கேறவிருக்கிறது. இது காணாமற் போன குடும்பத்தின் பெண்ணொருவரின் கதையாக காட்சியாகிறது. இரண்டு வகையான நாடகங்களையும் தேவநாயகம் தேவானந்த் எழுதி நெறிப்படுத்தியுள்ளார். தை மாதத்தின இறுதி நாட்களில் மேடையேறும் இந்த இரண்டு நாடகங்களையும் உலகெங்குமிருந்து பார்வையிட முடியும். இந்த நிகழ்வை இந்திய மத்திய பல்கலைக்கழகப் பேராசிரியர் கோ.இரவீந்திரனவர்கள் நெறிப்படுத்துகிறார். இதனை இலவசமாக மாலை 7.00 மணிக்குப் பார்வையிட முடியும்.

இதனைப் பார்க்க

Join Zoom Meeting
https://us02web.zoom.us/j/2666873933?pwd=eVd3QzU3RjZyRC82Q0l2bUVOa1E4dz09
Meeting ID: 2666873933
Passcode: ATM

# கள்ளத்தொடர்பு எனக்கூறி மனைவியைக் கொன்ற கணவன்



அட்டன், கினிகத்தேன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பகமுவ - மாபத்தன பகுதியில் இளம் தாயொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

28 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயான மாலிகா பிரியதர்ஷினி என்பவரே, அவரின் கணவரால் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணுக்கு மற்றுமொரு நபருடன் கள்ளத்தொடர்பு இருந்ததை அடிப்படையாக வைத்தே, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி மாலை இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் மறுநாள் 27 ஆம் திகதி மாலை குறித்த பெண்ணின் கணவர், தாமாகவே முன்வந்து கினிகத்தேனை பொலிஸில் சரணமடைந்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், ஸ்தல விசாரணையை மேற்கொண்டனர்.

நீதவான் பரிசோதனையின் பின்னர் சடலம் நாவலப்பிட்டிய வைத்திய சாலைக்கு எடுத்துசெல்லப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும்.

இக்கொலைச்சம்பவம் தொடர்பில் கினிகத்தேன பொலிஸாரும், மற்றும் அட்டன் கைரேகை பிரிவினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முத்துக்குமாருக்கு யாழில் நினைவேந்தல்





தியாகி முத்துக்குமாரின் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.
தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி படுகொலை நினைவுத் தூபியில் நினைவு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றது.
முத்துக்குமார் சென்னையில் வைத்து கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கையில் சிங்கள பேரினவாத அரசு நடத்திய தமிழினப் படுகொலையை நிறுத்த வலியுறுத்தியும், இனப்படுகொலைக்கு வல்லாதிக்க இந்திய அரசு துணைபுரிவதை கண்டித்து தன்னைத் தானே தீயிட்டுக் கொண்டு உயிர்நீத்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

# வீட்டுக் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா மீட்பு!

கிளிநொச்சி விவேகானந்தா நகர் பகுதியில் வீட்டுக் கூரைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 25 கிலோ 456 கிராம் கஞ்சாவினை கிளிநொச்சி பொலிஸ் பிரிவின் மது ஒழிப்பு பிரிவினாரால் மீட்க்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவின் மது ஒழிப்பு பிரிவினாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்த வீடு சுற்றி வளைக்கப்பட்டு கஞ்சா மீட்கப் பட்டதோடு. வீட்டு உரிமையாளரும்



கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யானைத் தந்தத்துடன் இருவர் கைது

முல்லைத்தீவு விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் இரண்டு யானைத் தந்தங்கள் மற்றும் துப்பாக்கியுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு முள்ளியவளை களிக்காடு வனப்பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் காட்டு யானை ஒன்று உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டது.

குறித்த யானையினை வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் பார்வையிட்ட போது யானை சுட்டுக்கொல்லப்பட்டமையும் அதனுடைய இரண்டு தந்தங்களும் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இராணுவ புலனாய்வு பிரிவினுடைய தகவலுக்கு அமைய முல்லைத்தீவு விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் இரண்டு யானைத் தந்தம் மற்றும் சட்டவிரோத துப்பாக்கி ஒன்றுடனும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வடக்கிற்கு...

இதுகுறித்து, அவர் இன்று (வெள்ளிக்கிழமை) குறிப்பிடுகையில், "வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி நாளை தொடக்கம் மூன்று நாட்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ஐயாயிரத்து 820 மருந்துகளும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஆயிரத்து 160 மருந்துகளும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஆயிரத்து 300 மருந்துகளும் வவுனியா மாவட்டத்துக்கு ஆயிரத்து 700 மருந்துகளும் மன்னார் மாவட்டத்துக்கு ஆயிரத்து 800 தடுப்பூசி மருந்துகளும் கோரப்பட்ட நிலையில் அவை முழுமையாக சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களுக்கும் தடுப்பூசி கோரப்பட்ட நிலையில், அவை தனியான திட்டத்தின் ஊடாக வழங்கப்படுமென சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட அஸ்ட்ராஜெனெகா கொரோனா தடுப்பூசி, கொவிஷீல்ட் (AstraZeneca/COVISHELD) என்ற பெயரில் ஐந்து இலட்சம் மருந்துகள் இந்தியாவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன.

அந்தத் தடுப்பூசி முதற்கட்டமாக சுகாதாரத் துறையினர், பொலிஸார் மற்றும் முப்படையினருக்கு ஏற்றும் பணி இன்று மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் 2300...

முன்னெடுக்கப்படும் என்று பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 2 ஆயிரத்து 300 கோவிட் -19 தடுப்பூசி மருந்துகள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊடாக அதனை இன்று பெற்றுக் கொள்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட அஸ்ட்ராஜெனெகா கோவிஷெல்ட் (AstraZeneca COVISHELD) கோவிட்-19 தடுப்பூசியின் 5 லட்சம் டோஸ்கள் இந்தியாவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன.

அந்த தடுப்பூசி முதல் கட்டமாக சுகாதாரத் துறையினர், பொலிஸார் மற்றும் முப்படையினருக்கு ஏற்றும் பணி இன்று மேல் மாகாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முதலாவது...

ஐடிஎச் வைத்தியசாலையில் வழங்கப்பட்டது.

இதேவேளை, தடுப்பூசி இராணுவத்தினர் மூவருக்கும் செலுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் வைத்து அவர்களுக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா செனெகா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் 5 வைத்தியசாலைகளில் இன்றைய தினம் கொவிட் தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னாரிலும்...

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கொவிட்-19 தடுப்பூசிகள் மன்னார் மாவட்டத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 1280 கொவிட்-19 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது.

அவற்றை எமது சுகாதார துறையினருக்கு முதல் கட்டமாக செலுத்தப்படவுள்ளது. 2 ஆம் கட்டமாக வழங்கப்படும் கொவிட்-19 தடுப்பூசிகள் 60 வயதிற்கு மேற்பட்ட மக்களுக்கு செலுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

-இதேவேளை மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 170 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 1153 பேர் இந்த மாதம் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழுக்கு...

திறந்துவைக்கப்பட்டது.

அங்கு ஒவ்வொரு மாவட்ட பேருந்துகள் தரித்து நிற்கும் இடங்களைக் குறிக்கும் காட்சிப் பலகைகளில் சிங்கள மொழி முதலிலும் தமிழ்மொழி இரண்டாவதாகவும் இடம்பெற்றமை சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

அது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வரின் அறிவுறுத்தலில் உள்ளூர் அச்சகம் ஒன்றின் ஊடாக தரிப்பிடப் பலகைகளை சீர்செய்ய சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தரிப்பிட பலகையில் தமிழ்மொழி முதலிலும் சிங்கள மொழி இரண்டாவதாகும் இடம்பெறும் வகையில் சீரமைக்கப்பட்ட பலகை ஒன்று இன்று முதல்வரிடம் கையளிக்கப்பட்டது.

அதனையடுத்து அனைத்து பலகைகளும் இன்று அகற்றப்பட்டு சீரமைத்து சில தினங்களுக்குள் மீளவும் பொருத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஐ.நா....

போடப்படுகிறது.

தனக்கான தடுப்பூசியை பொதுவெளியில் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்வேன் என கடந்த டிசம்பரில் குட்டரெஸ் தெரிவித்தார்.

பொருத்தமுடைய அனைவரும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது தார்மீகக் கடமையாகும். இதன்மூலம் எம்மைத் தற்காத்துக்கொண்டு சமூகத்தையும் பாதுகாக்க முடியும் என அவர் கூறினார்.

இந்நிலையில் தனக்கான தடுப்பூசியை ஊடகங்கள் முன்பாக நேற்று அன்டோனியோ குட்டரெஸ் போட்டுக் கொண்டார்.

தடுப்பூசி பெற்றுக்கொண்ட பின்னர் இது குறித்து தனது ருவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள அவர், கொரோனா தடுப்பூசி பெற்று கொண்டதை நினைத்து நான் மகிழ்ச்சியாக உணர்கிறேன். தடுப்பு மருந்து அனைவருக்கும் கிடைப்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும் எனக் கூறியுள்ளார்.

## தீவிர...

பல்கலைக்கழக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதுடன், பின்னர் நேற்று இரவு ஐடிஎச் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

# கொரோனா உயிரிழப்பு 297ஆக அதிகரித்துள்ளது



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 7 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 297ஆக அதிகரித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று (வியாழக் கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில், கொழும்பு 6 பகுதியைச் சேர்ந்த 86 வயதான ஆணொருவர் இத்தேபான மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது கடந்த 26 ஆம் திகதி உயிரிழந்தார்.

கொவிட்19 நியூமோனியா நிலை, நீரிழிவு, உயர் குருதி அழுத்தம் என்பன அவரது மரணத்திற்கான காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று நிட்டம்புவ பகுதியை சேர்ந்த 73 வயதான ஆணொருவர் நேற்று உயிரிழந்துள்ளார். அவரது மரணத்திற்கான காரணம் கொவிட்19 நியூமோனியா நிலையால் ஏற்பட்ட மாரடைப்பு, நீரிழிவு மற்றும் உயர் குருதி அழுத்தம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி - கல்லேல்ல பகுதியை சேர்ந்த 76 வயதான பெண்ணொருவர் இரத்தினபுரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். கொவிட்19 நியூமோனியா நிலை, இதய நோய், குருதி விசமானமை அவரது மரணத்திற்கான காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு 13 பகுதியை சேர்ந்த 61 வயதான ஆணொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கொவிட் 19 தொற்றுறுதியானவராக கண்டறியப் பட்டார். அதன்பின்னர் அவர் முல்லேரியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் கடந்த 27 ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது மரணத்திற்கான காரணம் கொவிட் 19 நிலையால் இதயம் செயலிழந்தமையே காரண மாகும். அதேநேரம், கொழும்பு சிறைச்சாலையில் இருந்த 61 வயதான ஆண் கைதியொருவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொவிட் 19 தொற்றுறுதியானவராக கண்டறியப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் கடந்த 16 ஆம் திகதி உயிரிழந்தார். கொவிட்19 நியூமோனியா நிலை,மாரடைப்பு, நீரிழிவு அவரது மரணத்திற்கான காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொழும்பு 6 பகுதியை சேர்ந்த 67 வயதான பெண்ணொருவர் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் கடந்த 24 ஆம் திகதி உயிரிழந்தார். அவரது மரணத்திற்கான காரணம் கொவிட் 19 நியூமோனியாவாகும்.

இதேவேளை, எந்தரமுல்ல பகுதியை சேர்ந்த 62 வயதான ஆணொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது கடந்த 21 ஆம் திகதி உயிரிழந்தார். கொவிட்19 நியூமோனியா நிலை, சிறுநீரக பாதிப்பு என்பன அவரது மரணத்திற்கான காரணம்" என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 61 ஆயிரத்து 586 ஆக உயர்வடைந்துள்ளது.

பேலியகொடை கொத்தணியுடன் தொடர்புடைய 852 பேருக்கு நேற்று கொவிட்19 தொற்றுறுதி யானதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி மினுவாங்கொடை, பேலியகொடை மற்றும் சிறைச்சாலை கொத்தணியில் தொற்றுறுதி யானவர்களின் எண்ணிக்கை 57 ஆயிரத்து 630 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்து வந்த 40 பேருக்கும் நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து வந்த 33 பேரும், ஓமானில் இருந்து நாடு திரும்பிய 7 பேரும் அதில் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகிய 6 ஆயிரத்து 854 பேர், கொவிட் 19 நோயாளர்கள் சிகிச்சை மையங்களில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பதும் குறிப் பிடத்தக்கது.

# விலங்குகளை வேட்டையாட அமைத்த மின்சார இணைப்பில் சிக்கி இரண்டு குடும்பஸ்தர்கள் உயிரிழப்பு

மன்னார்- யாழ்ப்பாணம் பிரதான வீதி, திருக்கேதீஸ்வரம் மாளிகைத்திடல் கிராம அலுவலகர் பிரிவிலுள்ள பிரதான வீதிற்கு சற்று தொலைவில், மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில் இரண்டு சடலங்களை இன்று (வெள்ளிக்கிழமை) காலை மன்னார் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் அடம்பன் பள்ளிவாசல் பிட்டி பகுதியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான மூக்கையா மகேந்திரன் (வயது-45) மற்றும் வேட்டையார் முறிப்பு பகுதியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அந்தோனிப் பிள்ளை தேவசங்கர் (வயது-37) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

திருக்கேதீஸ்வரம் மாளிகைத்திடல் கிராம அலுவலகர் பிரிவிலுள்ள பிரதான வீதிக்கு அருகிலுள்ள மின் கம்பத்தில் இருந்து சட்ட விரோதமான முறையில் மின்சார இணைப்பை பெற்று, வீதிக்கு சற்று தொலைவில் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக அமைத்திருந்த மின் இணைப்பில் சிக்கியே இருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இன்று காலை குறித்த இருவரும், மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில் காணப்பட்டதை அவதானித்த பிரதேசவாசிகள், மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபை அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு வருகைதந்து மின் இணைப்பை துண்டித்ததன் பின்னரே சடலங்களை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர். இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புனானையில் பேருந்து தடம்புரண்டு விபத்து: 13 பேர் படுகாயம்

மட்டக்களப்பு பிரதான வீதி புனானையில் இடம்பெற்ற பேருந்து விபத்தில், 13பேர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலநறுவையில் இருந்து கல்முனை நோக்கி போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்து, இன்று (வெள்ளிக் கிழமை) காலை 6.30 மணிக்கு பயணிகளுடன் பயணித்துள்ளது. இதன்போது புனானைப் பகுதியில் முன்னாள் சென்ற வாகனத்தை முந்தி செல்லமுற்பட்டபோது, வேக கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி, தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதில் பயணித்த 13 பேர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மூவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்ட பயிர்ச்செய்கை வைரஸால் பாதிப்பு



ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய விவசாய உற்பத்தி திட்டத்தின்கீழ் அம்பாறை மாவட்டத்தில் பயிரிடப்பட்ட சோளன் அறுவடை சில இடங்களில் நடைபெற்ற போதிலும் சில பகுதிகளில் மிக வேகமாக பரவி வரும் இனந்தெரியாத வைரஸ் தாக்கத்தால் தற்போது ஏக்கர் சோளச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நோய்த் தாக்கத்தால் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ள சில விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக கல்முனை, நீலாவணை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, நாவிதன் வெளி , நிந்தவூர், ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ,அக்கரைப்பற்று, திருக்கோவில் ,சம்மாந்துறை, காரைதீவு, மாவடிப்பள்ளி ,போன்ற பிரதேசங்களில் வீட்டுத்தோட்ட பயிர் செய்கையாகவும் இச்சோளச்செய்கை செய்கை செய்யப் பட்டிருந்தது.

இம்முறை செய்கை பண்ணப்பட்டுள்ள சோளன் பயிர்களில் சுமார் 100க்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் படைப்புளு தாக்கத்தின் பரவல் காணப்படுவதாகவும் அதனைக் கட்டுப்படுத்த விவசாய திணைக் களத்தின் உதவியுடன் நடவடிக்கை பல்வேறு பகுதிகளிலும் எடுக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது இச்செய்கையில் இனந்தெரியாத வைரஸ் தாக்கங்கள் அதிகரித்துள்ளதுடன் சோளத்தாவரத்தின் இலைகளிலும் பூக்களிலும் அவதானிக் கப்பட்டுள்ளன. மேலும் சில பகுதிகளில் சோளச்செய்கையில் எவ்வாறான நோய் பீடிக்கப்பட்டுள்ளது என்பதை இன்னும் அடையாளம் காணப்படாமலும் உள்ளது.

அத்துடன் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் வழிகாட்டுதலில் புதிய அரசாங்கத்தின் உள்நாட்டு உணவு உற்பத்தி கொள்கைத் திட்டத்திற்கமைவாக நாடுபூராகவும் ஒரு இலட்சத்தி 80 ஆயிரம் மெற்றிக்தொன் சோளன் உற்பத்தியினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் எம்மை ஊக்குவித்தவர்கள் தற்போது எம்மை கைவிட்டுள்ளதாக விவசாயிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.அந்த வகையில் எமது மாவட்டத்தின் பல பிரதேச செயலாளர் பிரிவில் இம்முறை செய்கை செய்யப்பட் டுள்ள சோளன் பயிர்களில் பெரும்பாலான சோளன் படைப்புழுத் தாக்கத்தின் பரவல் காரணமாக முற்றுமுழுதாக அழிவடைந்த நிலையில் உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பல பிரதேசங்களின் தற் போது சோளம் செய்கை பண்ணப்பட்டு வந்த நிலையில் சோளம் குடலைப்பருவமாக வரும் போதே படைப்புழுக்களின் தாக்கம் ஆரம்பித்து காணப்படுகின்றது. குறித்த பிரதேச மக்களின் ஜீவனோபாய தொழிலில் ஒன்றாக விவசாய செய்கை முக்கிய பங்கு வகிக்கின்றது. அதிலும் சோளம் செய்கை மூலம் இவர்கள் தங்களது வாழ்நாள் உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு உதவியாக உள்ளது.

அத்தோடு சோளம் குலைகள் சில வற்றினை படைப்புழுக்கள் அழித்து வெறும் சோளம் நெட்டிகள் மாத்திரம் சில சோளம் செய்கை தோட்டங்களில் காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக எந்தவித அதிகாரிகளும் வருகை தரவில்லை என் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் முதல் ஆரம்பித்த படைப்புழுக்களின் தாக்கம் தொடர்ச்சியாக இம்முறையும் ஏற்பட்டுள்ளது. கடந்த முறை அனுபவித்த நஷ்டத்தினை இம்முறை பூர்த்தி செய்யலாம் என்ற எண்ணத்தில் மக்கள் சோளம் செய்கையில் ஈடுபட்ட நிலையில் மீண்டும் படைப்புழுக்களின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே தொடர்ச்சியாக படைப்புழுக்களின் தாக்கம் ஏற்பட்டு வரும் பட்சத்தில் பாதிக்கப்படும் எங்களுக்கு உரிய நஷ்ட இட்டினை வழங்குமாறு கோருவதுடன் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் தங்களது பகுதிகளுக்கு இதுவரையும் வருகை தரவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக விவசாய விரிவாக்கல் திணைக்கள பிரதிப் பணிப்பாளர், உதவி விவசாய பணிப்பாளர் கள், பாடவிதான உத்தியோகத்தர்கள் , விவசாய போதனாசிரியர்கள், தொழினுட்ப உத்தியோகத்தர்களுக்கு இந்நோய்த்தாக்கத் தினைக் கட்டுப்படுத்தும் விதம் தொடர் பாகவும் விவசாயிகளுக்கு விழிப்பூட்டல் செய்து கட்டுப்பாட்டு செயன்முறைகளைக் கற்றுக் கொடுக்கும் பயிற்சிகளும் வழங்கி இருந்தனர்.

இது தொடர்பாக விவசாயிகளுக்கான அறிவூட்டல்கள் வழங்கல், செயன்முறைப் பயிற்சி வழங்கல், களவிஜயங்கள், துண்டுப் பிரசுரங்கள் வழங்குதல், ஒலிபெருக்கி மூலம் அறிவூட்டல், போன்ற நடவடிக்கைகள் எமது உத்தியோகத்தர்களால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இப்படைப்புளுத்தாக்கமானது இளம்பருவப் பயிர்களுக்கு அதிகமாக காணப்படுவதுடன் முதிர்பருவ பயிர்களுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கது